IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
O.S.NO:199/2013

**DEP OF WITNESS: PW1**

NAME: முகமது ஐயீம் RELIGION: Muslim

FATHER NAME: K.Saleem Basha CASTE: Muslim

VILLAGE: Pernambut OCCUPATION: Business

TALUK: Pernambut AGE: 32

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 19-12-2018

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

சர்வே எண்.4 என்பது சர்வே எண்.4/1, 4/2 என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.3 ஆனது சர்வே எண்.3/1, 2எ, 2பி, 3எ, 3பி, 4எ, 4பி என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் சர்வே எண்.13 ஆனது சர்வே எண்.13/1,13/2,13/3 என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் சர்வே எண்.12 ஆனது சர்வே எண்.12/1, 2, 3 என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எருகம்பட்டு கிராம சர்வே எண்.3-க்கு உண்டான புலவரைடம் என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் சர்வே எண்.3-க்கு உண்டான புலவரைபடம் பி.வா.சா.ஆ.2-ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் எருகம்பட்டு கிராம சர்வே எண்.4 மற்றும் சர்வே எண்.12 சொத்துக்களுக்கு உண்டான புலவரைபடம் என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் மேற்படி புலவரைபடங்கள் பி.வா.சா.ஆ.3-ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண்.13-ல் வழி உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.13/3 ஆனது யார் பெயரில் உள்ளது என்றால் எனது தகப்பனார் சலீம் பாஷா பெயரில் உள்ளது. அதன் வழியாகத்தான் நாங்கள் வழிபாத்தியம் கொண்டாடுகிறோம் என்றால் சரிதான். தாவா 1-ம் அயிட்ட சொத்தில் சொல்லப்பட்டுள்ள மரியம்பீ என்பவரிடமிருந்து பிரதிவாதிகள் சொத்தை கிரயம் வாங்கியுள்ளார்களா என்றால் தெரியாது. நான் சொல்லும் வழிபாத்தியமானது எந்தெந்த உட்பிரிவுகள் கொண்ட சொத்தில் செல்கிறது என்று சொல்லமுடியுமா என்றால் எனக்கு தெரியாது. தாவா 1-ம் அயிட்ட சொத்தில் உரிமை கொண்டாடிய நிலையில் பிரதிவாதிகள் தகராறு செய்தார்களா என்றால் அது எனது தகப்பனாருக்கு தான் தெரியும். இந்த வழக்கை தாக்கல் செய்த பிறகு பிரதிவாதிகள் சர்வே எண்.11/2-ல் உள்ள 4 ஏக்கர் சொத்தில் பிரச்சனை செய்தார்களா என்றால் இல்லை. தாவா 2-ம் அயிட்ட சொத்தான சர்வே எண்.1/4பி-ல் உள்ள 3.93 ஏக்கர்

சொத்தில் போடப்பட்டுள்ள கல் கம்பங்களுக்கு உள்ளே வந்து பிர்ச்சனை செய்தார்களா என்றால் பிரச்சனை செய்ததால் தான் இந்த வழக்கு. தாவா 3-ம் அயிட்ட சொத்தான சர்வே எண்.4/2-ல் உள்ள 5 ஏக்கர் சொத்தில் பிரதிவாதிகள் தகராறு செய்தார்களா என்றால் அந்த சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லி தகராறு செய்தார்கள். மேற்படி எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களுக்கு அமீனாபீ மற்றும் மரியம்பீ ஆகியோருடைய மாந்தோப்பு வழியாக சென்று வரும் வழியை பிரதிவாதிகள் தடைசெய்தார்கள் என்று தான் வழக்கு போட்டுள்ளோம் என்று சொன்னால் எனது தந்தைக்கு தான் தெரியும். தாவா சொத்துக்களுக்கு உண்டான மூல ஆவணமான பி.வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் இல்லாத வழிபாத்தியத்தை அதற்கு பின்னிட்டு ஏற்பட்ட வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான கிரய ஆவணங்களில் இல்லாத வழி பாத்தியத்தை இருப்பதாக சொல்லி ஏற்படுத்தியுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கு பக்கத்தில் பிரதிவாதிகள் நிலம் வாங்கியுள்ளார்களா என்றால் வாங்கியுள்ளார்கள். பிரதிவாதிகளின் நிலம் தாவா சொத்துக்களுக்கு எந்த திசையில் உள்ளது என்று எனக்கு தெரியாது. எங்களுடைய சொத்துக்களுக்கு சொல்லப்பட்டுள்ள செக்குபந்தி விவரத்தில் பிரதிவாதிகள் நிலத்தை செக்குபந்தியாக குறிப்பிட்டுசொல்லியுள்ளோமா என்றால் தெரியாது. தாவா சொத்துக்களுக்கு செக்குபந்தி விவரம் எனக்கு தெரியாது. தாவா 1-ம் அயிட்ட சொத்தில் சர்வே எண்.11/2-ல் எங்களுக்கு பாத்தியப்பட்ட 4 ஏக்கர் சொத்திலும், தாவா 2-ம் அயிட்ட சொத்தான சர்வே எண்.3/4பி-ல் உள்ள 3.93 ஏக்கர் சொத்திலும், தாவா 3-ம் அயிட்ட சொத்தான சர்வே எண்.4/2-ல் உள்ள 5 ஏக்கர் சொத்திலும் பிரதிவாதிகள் உரிமை கொண்டாடினார்களா என்றால் பாத்தியம் உள்ளதால் பிரச்சனை செய்தார்கள். தாவா 1-ம் அயிட்ட சொத்திற்கு புதிய உட்பிரிவு சர்வே எண்.11/2சி அதில் 3.26 ஏக்கர் உள்ளது. தாவா 1-ம் அயிட்ட சொத்தில் விஸ்தீரணம் தவறாக கொடுக்கப்பட்டுள்ளதால் அந்த சொத்தை பொருத்து எங்களுக்கு எவ்வித பரிகாரமும் பெற அருகதை இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து விவரத்தில் பிரதிவாதிகளுடைய சொத்தின் சர்வே எண்ணையும் குறிப்பிடவில்லை, அவர்களுடைய சொத்தில் வழிபாாத்தியம் இருப்பதாகவும் வழக்குரையில் சொல்லவில்லை அதனால் பிரதிவாதிகளுக்கெதிராக வழிபாத்தியம் கோரி தாக்கல் செய்துள்ள இந்த தாவா சட்டப்படி செல்லாது தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. நாங்கள் இந்த தாவாவை அமினாபீ வகையறா மற்றும் மரியம்பீ வகையறாவிற்கு எதிராகத்தான் தாவா தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. அவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் இந்த தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது பற்றி எனது தகப்பனாருக்கு தான் தெரியும் எனக்கு நேரடையாக தெரியாது என்றால் சரிதான். அதனால் அந்த புகார் எனது தகப்பனாரால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த தாவாவிற்கு

வியாஜ்ஜிய மூலமே கிடையாது வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையில் இருந்த போது தான் நாங்கள் 7-ம் வாதி சமில் அகமது பெயரில் கிரய ஆவணம் எழுதி கொடுத்தோம் என்றால் சரிதான். அந்த கிரய பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. அந்த கிரயபத்திரப்படி 7-ம் வாதிக்கு எந்தவிதமான உரிமையும் ஏற்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. 7-ம் வாதிக்கு இந்த வழக்கை நடத்தை அருகதை கிடையாது என்று சொன்னால் சரியல்ல. அதனால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/ Muhamed Jaheem (PW1)

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/. C.Senthil Kumar. 19.12.2018.
District. Munsif.